## பத்திரிக்கை செய்தி

### பொது அறிவிப்பு

**பேர்ணாம்பட்டு மற்றும் காட்பாடி வட்டங்களில் நிலுவையில் உள்ள பட்டா மாறுதல் மனுக்களை முடிவு செய்ய சிறப்பு நடவடிக்கை**

வேலூர் மாவட்டத்தில் உள்ள 6 வட்டங்களிலும் சேர்த்து இணையவழி (OPT) உட்பிரிவு பட்டா மாற்றம் சம்பந்தப்பட்ட 15647 மனுக்கள் நிலுவையில் உள்ளது. இம்மாவட்டத்தில் 6 வட்டங்களில் 20 குறுவட்ட அளவர் பணியிடங்களில் 7 குறுவட்ட அளவர் பணியிடம் காலியாக உள்ளது. மேலும் இதே நிலஅளவர்களை கொண்டே வீட்டு மனை ஒப்படை, நிலஎடுப்பு, புறவழிச்சாலை மற்றும் குடிமராமத்து சம்பந்தப்பட்ட ஏரி, குளங்கள் அளக்கும் பணிகள் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மாவட்டத்தில் நிலுவையில் உள்ள பட்டா மாறுதல் மனுக்களில் பெரும்பாலான மனுக்கள் உரிய தொடர்பு பத்திரங்கள் சமர்பிக்காத காரணத்தால் நிலுவையில் உள்ளதென தெரியவருகிறது. மேலும் சம்பந்தப்பட்ட மனுதாரர்களுக்கு குறுந்தகவல் (SMS) மூலம் தகவல் அனுப்பியும் நாளது தேதி வரை ஆவணங்கள் ஏதும் சமர்பிக்கவில்லை.

எனவே சோதனை முயற்சியாக (Pilot basis) பேர்ணாம்பட்டு வட்டத்தில் உள்ள ஏரி குத்தி மற்றும் பேர்ணாம்பட்டு கிராமங்கள் மற்றும் காட்பாடி வட்டத்தில் உள்ள சேனூர் மற்றும் வண்டரந்தாங்கல் ஆகிய கிராமங்களில் கடந்த ஓராண்டில் நிலுவையில் உள்ள 899 மனுக்களின் விவரம் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களிலும், கிராம நிர்வாக அலுவலகங்களிலும் ஒட்டப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட மனுக்களின் விவரங்கள் வேலூர் மாவட்ட இணையதளத்தில் **https://vellore.nic.in/notice_category/announcements/** என்ற வலைதளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஆகவே மேற்கண்ட பட்டியலில் இடம் பெற்றுள்ள மனுதாரர்கள் மட்டும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் நிலஅளவை பிரிவில் தங்களது உட்பிரிவு பட்டா மாற்ற மனு தொடர்பான தொடர்பு பத்திர நகல்களை வரும் 16.03.2020-க்குள் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு உரிய காலத்திற்குள் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்காத மனுக்கள் நிராகரிக்கப்படும். மேலும் மேற்கண்ட கிராமங்களுக்காக பிரத்யேகமான நிலஅளவர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே சம்பந்தப்பட்ட கிராம பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்

வேலூர்

5/3/2020